**(2025-26-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE** **25 PTM 209**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

எம். ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் — நேரம் : 3 மணி

## ஒப்பிலக்கியம்

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1) 'Comparative literature' என்பதை 'ஒப்பியல் இலக்கியம்' என்று தமிழ்படுத்தியவர் யார்?

அ)ரெனிவெல்லாக் ஆ)கைலாசபதி இ)ஆஸ்டின் ஈ)குளோரியா

2) சமத்துவம், சகோரத்தவம், சுதந்திரம் எனும் முப்பெரும் கொள்கைகளை வழங்கிய நாடு?

அ)பிரெஞ்சு ஆ)ரஷ்யா இ)பெல்ஜியம் ஈ)சோவியத் யூனியன்

3) 'ஓவியப்பாட்டு சிற்பப்பாட்டு' என்று அழைக்கப்படும் நூல் எது?

அ)சிலப்பதிகாரம் ஆ)பதிற்றுப்பத்து இ)நற்றிணை ஈ)நெடுநல்வாடை

4) கிரேக்க வீரயுகப் பாடல்களில் வரும் விருந்துகள் அமையும் தமிழ் இலக்கிய வகை எது?

அ)ஆற்றுப்படை ஆ)காப்பியம் இ) சிற்றிலக்கியம் ஈ)பக்தி இலக்கியம்

5) வடமொழியல் 'ரஸம்' என்பதை தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

அ)குறிப்பு ஆ)உவமை இ)மெய்ப்பாடு ஈ)இறைச்சி

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6) தமிழர்களின் தேசியக் காப்பியங்கள் எவை?

7) ஒப்பீட்டுக் கொள்கையின் அடிப்படைகளை விளக்கும் நூலாகக் கருதப்படும் நூல் எது?

8) சிலப்பதிகாரத்தில் ஆடல் நிகழ்வுகள் இடம்பெறும் காதையைச் சுட்டுக.

9) வால்ட் விட்மனைத் தன் முன்னோடியாகக் கொண்டு கவிதைகளைப் புதுமைப்படுத்தியவர் யார்?

10) குயில் எனும் மாத இதழை நடத்திவந்தவர் யார்?

### பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. அ) தமிழில் ஒப்பிலக்கியத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உலக இலக்கியம் குறிப்பு வரைக.

12. (அ) பிரெஞ்சுக் கோட்பாடு குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அமெரிக்கக் கோட்பாடு என்றால் என்ன?

(த.பி.பா.)

13. (அ) இலக்கியமும் கூத்தும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இலக்கியமும் ஓவியமும் குறித்து எழுது.

14. (அ) தமிழ்-கிரேக்க வீரயுகப் பாடல்கள் குறித்து தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கிய நோக்கில் பாரதி – ஷெல்லியின் கருத்துக்களை உணர்த்துக.

15. அ) மெய்ப்பாடும் இரசக்கோட்பாடும் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன், கிருஷ்ண சாஸ்திரி கவிதைகளில் தோன்றும் இயற்கையைப் புலப்படுத்துக.

## பகுதி – இ ( 5 X 8= 40 மதிப்பெண்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K4/K5)**

16. அ) நான்கு வகை இலக்கியப் பார்வைகள் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) ஐரோப்பிய நாடுகளில் ஒப்பிலக்கியம் வளர்ந்த விதத்தை விளக்குக.

17. அ) ஒப்பிலக்கியக் கோட்பாடுகளுள் காரணகாரிய ஆய்வு மற்றும் மூலமும் தாக்கமும் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கிய நோக்கில் மொழிபெயர்ப்பு குறித்து விரிவாகக் கட்டுரைக்க.

18. (அ) இலக்கியங்களில் காணலாகும் உளவியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இலக்கியங்கள் குறித்த சமூகவியல் பார்வையை விவரி.

19. (அ) திருவள்ளுவரும் இலியட்டும் குறித்து ஒப்பிட்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) கம்பனும் மில்டனும் குறித்து ஒப்பாய்வு செய்து எழுதுக.

20. (அ) தொல்காப்பியத்தோடு வடமொழி இலக்கிய கொள்கைகளை ஒப்பிடுக.

(அல்லது)

(ஆ) நாமக்கல் கவிஞர்-வள்ளத்தோள் கவிதைகளில் காணலாகும் காந்திய சிந்தனைகளைத் தொகுத்துரைக்க.

*****